காலை முரசு

பக்கங்கள்:-24

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 26 | ஞாயிற்றுக்கிழமை | 10.03.2024 | அதிர்வு 222 |
|---|---|---|---|---|---|

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!


ஜாஎல, தடுகம பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைகளுக்காக ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். 06

### வெடுக்குநாறிமலை கோயிலில் அரங்கேறிய

# பொலிஸ் அராஜகங்களைக் கண்டித்து நல்லை ஆதீன முன்றிலில் போராட்டம்

### நாளை அணிதிரளுமாறு தவத்திரு அகத்தியர் அடிகளார் அழைப்பு



(ந.லோகதயாளன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோயிலில் மகா சிவராத்திரி நாளில் அரங்கேறிய பொலிஸ் அராஜகங்களைக் கண்டித்து நாளை மாலை 4 மணிக்குக் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தவத்திருஅகத்தியர்அடிகளார் தலைமையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 06

# ஓட்டோவில் கடத்தப்பட்ட மாணவி கழுத்தறுக்கப்பட்டுப் படுகொலை!

கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் பாடசாலை மாணவி ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காலி,, எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாணயக்கார மாவத்தைப் பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டமொன்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் தல்கஹவத்த, கரந்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய ஹன்சிகா நதிஷானி என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கழுத்தறுக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் ஓட்டோவில் சென்ற சிலர் மேற்படி மாணவியைக் கரந்தெனிய, தல்கஹாவத்த 06



## வெடுக்குநாறிமலை பூசகர் உள்ளிட்ட 8 பேருக்கும் 12 வரை விளக்கமறியல்



(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மகா சிவராத்திரி 06




யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி, மேம்பாடு என்ற இலக்குகளோடும் திட்டங்கள், எண்ணக் கருவுடனும் பொது அமைப்புகளோ, தொண்டு நிறுவனங்களோ அல்லது வர்த்தகக் கட்டமைப்புகளோ யாழ் நகருக்கு வந்தால் முண்டியடித்துக் கொண்டு முன்னுக்கு நிற்கும் நமது யாழ். மாநகர சபை. எல்லா விடயங்களிலும் கட்டணம் அறவிட்டுச் சுரண்டித் தள்ளுவதற்குத்தான். கட்டணம் அறவிட்டுப் பொது நிகழ்வு நடத்துபவர்களிடம் 'நனைந்த கள்ளனை நக்கின கள்ளன் மாதிரி' 06

# வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் ‘ஓம் நமசிவா’ சொல்வது குற்றமா?

## சட்டத்தரணி சுகாஷ் கேள்வி




(கே.வசந்தன்)

வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திற்குச் சென்று ஓம் நமசிவாய சொல்வது குற்றமா என சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் வழிபாட்டில் ஈடுபட்ட ஆலய பூகர் உள்ளிட்ட 8 பேரையும் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியமைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையினுடைய எந்தச் சட்டத்தையும் மீறாத 8 அப்பாவிகளான சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். பொலிஸாருடைய விசாரணைகள் முடியாத காரணத்தினால் இந்த வழக்கு எதிர்வரும் செவ்வாய்கிழமைக்கு திகதியிடப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் கவனத்திற்கு பொலிசாரின் அராஜகத்தையும், 8 சந்தேக நபர்களையும் தாக்கிக் காயப்படுத்திய சம்பவத்தையும் கொண்டு வந்துள்ளோம்.

அதனால் அந்த 8 பேரையும் சட்ட வைத்திய அகாரியிடம் முன்னிலைப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மன்று பணித்திருக்கிறது. அந்த சந்தேக நபர்கள் செய்த ஒரேயொரு தவறு ‘ஓம் நமசிவாய’ என்று சொல்லியது மாத்திரம் தான். வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்திற்கு சென்று ‘ஓம் நமசிவாய’ சொல்வது குற்றமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளோம்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழக்கு திகதியிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பொலிஸாரின் நடவடிக்கையும், கைதும்தான் சட்டவிரோதமானதே தவிர, இவர்கள் எந்தக் குற்றம் செய்யவில்லை எனத் தெரிவித்தார்.

# வெடுக்குநாறி மலையில் பொலிஸாரின் அடாவடி!

## அமைச்சர் டக்ளஸ் விசனம்

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் அனைத்தும் அடாவடித்தனம் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறான செயற்பாடுகள் நாட்டில் இன நல்லிணக்கதை சீர்குலைக்கும் வகையில் அமைகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

பளைப் பகுதியில் எரிபொருள் நிலைய திறப்புவிழா நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் குறித்த விடயம் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

சிவராத்திரிதினம் என்பது இந்துக்களின் முக்கிய சமயம் சார் நிகழ்வாகும். இதனை முன்னிட்டு அந்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள அடியவர்கள் சென்றபோது பொலிஸார் தடுத்து நிறுத்தி அடாவடியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



குறிப்பாக வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் நீதிமன்ற அனுமதியுடன் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிவ பக்தர்களையும், அவர்களின் வழிபாட்டையும் அவமானப்படுத்தும் வகையில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் அவர்களது அடாவடித்தனமாகவே இருக்கின்றது.

ஆலய தரிசனம் செய்வது அவரவர் உரிமையாகும். இதைத் தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. இவ்வாறான நிலையில் அந்த ஆலயப் பகுதியில் பொலிஸார் இவ்வாறான தடைகளையும் அடாவடித்தனங்களையும் செய்வதற்கு யார் அனுமதி கொடுத்தது? அதேநேரம் இதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

அத்துடன் நடைபெறவுள்ள அமைச்சரவையிலும் இவ்விடயம் தொடர்பில் கொண்டு செல்லவுள்ளேன் என்பதுடன் இனிவருங்காலங்களில் பொலிஸார் இவ்வாறான செயற்பாடுகளைமேற்கொள்ளாதிருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். – என்றார்.




### வெடுக்குநாறி ஆலயதின் மீதான அடாவடித்தனத்துக்காக

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு இந்துக்கள் பாடம் படிப்பிப்பார்கள்

### சீற்றத்துடன் கூறுகின்றார் சிவசக்தி ஆனந்தன்

**(வசந்தன்)**

வெடுக்குநாறி ஆலய விவகாரம் தொடர்பாக ஜனாதிபதித் தேர்தலில் இந்துக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு பாடத்தைப் படிப்பிப்பார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி. ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாவில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவாரத்திரியை முன்னிட்டு பக்தர்கள் பூஜை வழிபாடுகளுக்கு சென்ற நிலையில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் வருகை தந்து ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவுக்கு இடையூறாக செயற்பட்டமையுடன், படையினரும் பொலிஸாரும் கீழ்தரமான முறையில் நடந்து கொண்டசெயலானது உலக வாழ் இந்துக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக அந்த ஆலயத்தில் தொல்பொருளுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் வழமையான பூஜை வழிபாடுகளை செய்யலாம் என நீதிமன்றம் உத்தரவிட்ட போதும் அந்த வழிபாட்டுக்கு பொலிஸார் இடையூறை ஏற்படுத்தி இரவு மோசமாக நடந்துள்ளார்கள்.

அங்கு இருந்த பூசகர் உள்ளிட்ட பலரைக் கைது செய்துள்ளனர். கைது செய்ததுடன் அவர்களுடைய ஆடைகளைக் கூடக் களைந்து திருக்கிறார்கள். வழிபாட்டுக்குரிய பொருள்களை அசிங்கப்படுத்தியுள்ளார்கள். தண்ணீர் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை. இது முழுக்க முழுக்க இலங்கை அரசாங்கத்தால் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடு. தொடர்ச்சியாக அந்த ஆலயத்தில் பொலிஸார் இடையூறை ஏற்படுத்தி வருகிறார்கள். பௌத்த துறவி ஒருவர் அந்த இடத்திற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில்தான் இந்தத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே தொடர்ச்சியாக அந்த ஆலய வழிபாட்டுக்கு அரசாங்கம், அமைச்சர்கள், ஜனாதிபதி இடையூறுகளை செய்து கொண்டு இருப்பது கண்டிக்கத்தக்கது.

அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட மோசமாக நடத்தப்பட்டுள்ளார்கள். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் – குறிப்பாக ஆளுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீங்கள் அரசாங்கத்துடன் இணைந்து இருந்து அபிவிருத்தி செய்கின்றோம் என்ற பெயரில் எந்தவித அபிவிருத்தியும் செய்யாது அரசாங்கத்தினதும், பொலிஸாரினதும் இந்தக் கெடுபிடிகளுக்கு நீங்கள் மௌனம் சாதித்துக் கொண்டு இருப்பதானது உங்களுக்கு வாக்களித்த வன்னி மக்களுக்கு செய்கின்ற பெரியதொரு துரோகமாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம்.

ஆகவே அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியோடு பேசி இந்த ஆலயத்தின் வழிபாட்டுக்கு பொலிஸார் தொடர்ச்சியாக மேற்கொள்கின்ற இடையூறுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அதுதான் எதிர்கால உங்கள் அரசியல் பயணத்திற்கும் உதவும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க ஒரு பக்கம் நல்லிணக்கத்தைப் பேசிக் கொண்டு இப்படியான கெடுபிடிகளை செய்வதன் மூலம் தமிழ் மக்களிடம் இருந்து குறிப்பாக இந்து, கிறிஸதவ மக்களிடம் இருந்து வாக்குகளை பெறுவது என்பது கடினமானதாகவே இருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் இந்துக்கள் அவருக்கான ஒரு பாடத்தை படிப்பிப்பார்கள். – எனத் தெரிவித்தார்.




# வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்டோரின் வேட்டியைப் பலவந்தமாகக் களைந்து இழுத்துச் சென்றனர்!

## நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் குற்றச்சாட்டு

**(வசந்தன்)**

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப் பட்டர்வகளின் வேட்டியை பலவந் தமாக களைந்து நிர்வாணமான முறையில் கொண்டு சென்றனர். நெடுங்கேணி பொறுப்பதிகாரி வேட்டியை கொடுக்க வேண்டாம் எனக் கூறி இனவாதத்தோடு மிலேச் சத்தனமாக நடத்தியிருந்தார் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித் துள்ளார்.


வெடுக்குநாறி மலை ஆதி லிங் கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி நிகழ்வுகளில் ஈடுபட் டிருந்தோர் மீது பொலிஸார் மிகப் பெரும் அராஜகத்தில் ஈடுபட்டனர். சிவராத்திரிக்கு முன்பு இருந்தே ஆலய நிர்வாகத்தினர் மீது பொலிஸார் அடக்குமுறைகளைப் பயன்படுத்தி இருந்தனர். ஆலய நிர்வாகத்தினர் பூஜைக்காக ஏற்பாடுகளை செய்த போது ஆல யத்திற்கு எந்தவித பொருள்களை யும் கொண்டு செல்ல பொலி ஸார் அனுமதிக்கவில்லை.

தூர இடங்களில் இருந்து வருகை தந்த பக்தர்கள் 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலையே இருந்தது. குடிதண்ணீரை எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. 5 கிலோ மீற்றர் நடந்து சென்று குழந்தைகள் உட்பட பலர் தண்ணீர் தாகத்தில் இருந்த போதும் அதனை எடுத்துச் செல்லப் பொலிஸார் அனுமதிக்க வில்லை. நீண்ட வாக்குவதாத் திற்கு பின்னரே 2 மணிக்கு பின்னர் குடி தண்ணீர் கொண்டு செல லப்பட்டது. கொண்டு செல்லப்பட்ட தண்ணீரை யும் மாலை நேரம் பொலிஸார் திறந்து வெளியேற் றினர்.

பக்தர்களை அச்சுறுத்தி வெளி யேற்ற முற்பட்டனர். படைப்பதற்காக செய்யப்பட்ட உணவுப் பொருள்க ளையும், பாத்திரங்களையும் பல வந்தமாக வாகனத்தில் ஏற்றிச் சென்றார்கள். 10 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள் களைப் பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர். பிரார்த்தனை களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பலவந்தமாக சப்பாத்து கால்களு டன் நுழைந்த பொலி ஸார் ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரை கைது செய்து கொண்டு சென்றனர்.

கொண்டு சென்ற போது 3 கிலோமீற்றர் நடத்தி விலங்கிட்டு இழுத்துச் சென்றார்கள். இழுத்துச் செல்லப்பட்ட போது கட்டைகள் தாக்கி கால்களில் காயமடைந்துள் ளார்கள். கைகளை விலங்குகளால் இறுக்கியமையால் கைகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்க ளில் ஒருவரின் வேட்டியை பலவந்த மாக களைந்து நிர்வாணமான முறையில் கொண்டு சென்றனர். நெடுங்கேணி பொறுப்பதிகாரி வேட்டியைக் கொடுக்க வேண்டாம் எனக் கூறி இனவாதத்தோடு மிலேச் சத்தனமாக நடத்தியிருக்கிறார்கள். ஏனையவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பூஜை செய்ய நீதிமன்ற அனுமதி இருந் தும் பொலிஸார் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, கைது செய்யப் பட்டர்களின் வேட்டிகளை களைந்து உள்ளாடைகளுடன் அழைத்து சென்றதை தாம் கண்டதாக ஆலய பக்தர்கள் குற்றம் சாட்டியுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.



பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION

த. பெ. இல. 10120 | தொலைநகல் 011-2171635
தொலைபேசி 011-2887973 | இணையதளம் www.Police.lk | மின்னஞ்சல் dir.media@police.gov.lk
எனது இலக்கம் 416/2024 | உமது இலக்கம் / 2024 | திகதி 09/03/2024

ஊடக

தலைமை ஆசிரியர் / செய்தி ஆசிரியர்,
செய்தி பணிப்பாளர்/ செய்தி முகாமையாளர்
சகல ஊடக நிறுவனங்கள்.

கௌரவ நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு மாறாக தொல்லியல் பாதுகாப்புப் பகுதியில் அத்துமீறி செயற்பட்ட 8 பேர் கைது – நெடுங்கேணி பொலிஸ் நிலையம்

கௌரவ நீதிமன்றத்தில் தற்போது வழக்கு விசாரணைகள் நிலுவையிலுள்ள போதிலும் நெடுங்கேணி பொலிஸ் பிரிவில் உள்ள வெடுக்குநாறி மலையில் தொல்பொருள் நிலையப் பிரதேசத்தினுள் சிவராத்திரி பூஜையை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என தொல்பொருள் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலய பூசகர் உள்ளிட்ட குழுவினர்களினால் வவுனியா கௌரவ நீதவான் நீதிமன்றத்தில் இலக்கம் B 540/23 இன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதி கோரப்பட்ட போதிலும், அவ்வாறான விஷேட பூஜைகள் நடாத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என கௌரவ நீதிமன்றம் 2024.03.04 ஆம் திகதியன்று தீர்ப்பு வழங்கியது.

மேலும், தொல்லியல் பிரதேசத்தில் பகல் நேரத்தில் சாதாரணமாக நடாத்தப்படும் வழிபாட்டு பூஜைகளுக்கு மேலதிகமாக விஷேட பூஜைகள் நடாத்துவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என 2024.03.06 ஆம் திகதி தொல்பொருள் பதில் பணிப்பாளர் அவர்களினால் வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் 2024.03.08 ஆம் திகதியன்று சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை தொல்லியல் பிரதேசத்தில் பணியில் அமர்த்தப்பட்டன.

எவ்வாறாயினும், இத் தொல்லியல் பிரதேசத்தில் மஹா சிவராத்திரி தினத்தன்று 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வருகை தந்து சாதாரணமாக பூஜை வழிபாடுகள் செய்தனர். இரவு நேரத்தில் தொல்லியல் பிரதேசத்தில் பூசகர்கள் மற்றும் 40 பேரை கொண்ட குழுக்களால் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி தொல்பொருள் திணைக்களம் அல்லது வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியின்றி 2024.03.08 ஆம் திகதி இரவு நேரத்தில் யாகம் செய்து விஷேட சிவராத்திரி பூஜைகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரவு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் அவ்வாறு செய்ய வேண்டாம் என தெரிவித்தபோதிலும் அவர்கள் அதனையும் மீறி தொடர்ந்து செயற்பட்டதுடன், நீதிமன்ற தீர்ப்பையும் மீறி நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக வனப் பிரதேசத்தினுள் யாக பூஜைகள் நடாத்துவதனூடாக வனப் பிரதேசத்தில் தீ ஏற்பட்டு அழிவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளதால் வன பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்தமை மற்றும் சட்ட முரணற்ற வகையில் ஒன்று கூடிய மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனும் குற்றத்தின் கீழ் பிரதான பூசகருடன் 08 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன்குளம் மற்றும் மாமடுவை ஆகிய பிரதேசத்தில் வசிக்கும் 24, 29, 30, 34, 37 மற்றும் 54 வயதுடையவர்கள் ஆவர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம்.
பொலிஸ் ஊடகப் பிரிவு.

# வறட்சி நேரத்தில் வெடுக்குநாறிமலை ஆலய யாகத்தினால் காட்டில் தீ ஏற்பட வாய்ப்பாம்!

## பொலிஸ் தரப்பின் நூதன விளக்கம் நீதிமன்ற உத்தரவை மீறினார்களாம்

**(கே.வசந்தன்)**

வறட்சியான நேரத்தில் வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய யாகத்தால் காட்டில் தீ ஏற்பட வாய்ப்பு உள்ளதுடன் நீதிமன்ற உத்தரவை மீறியதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றுய் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீதிமன்றத்தில் தற்போது வழக்கு விசாரணைகள் நிலுவையிலுள்ள போதிலும் நெடுங்கேணி பொலிஸ் பிரிவில் உள்ள வெடுக்குநாறி மலையில் தொல்பொருள் நிலையப் பிரதேசத்தினுள் சிவராத்திரி பூஜையை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என தொல்பொருள் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலய பூசகர் உள்ளிட்ட குழுவினர்களினால் வவுனியா நீதவான நீதிமன்றத்தில் இலக்கம் B 540/23 இன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதி கோரப்பட்ட போதிலும், அவ்வாறான விஷேட பூஜைகள் நடாத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என நீதிமன்றம் கடந்த 2024 மார்ச் 04 ஆம் திகதியன்று தீர்ப்பு வழங்கியது.

மேலும், தொல்லியல் பிரதேசத்தில் பகல் நேரத்தில் சாதாரணமாக நடத்தப்படும் வழிபாட்டு பூஜைகளுக்கு மேலதிகமாக விஷேட பூஜைகள் நடத்துவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என 2024 மார்ச் 06ஆம் திகதி தொல்பொருள் பதில் பணிப்பாளரினால் வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நேற்று (08) சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள், தொல்லியல் பிரதேசத்தில் பணியில் அமர்த்தப்பட்டனர்.

எவ்வாறாயினும், தொல்லியல் பிரதேசத்தில் மஹா சிவராத்தரி தினத்தன்று 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வருகை தந்து சாதாரணமாக பூஜை வழிபாடுகள் செய்தனர். இரவு நேரத்தில் தொல்லியல் பிரதேசத்தில் பூசகர்கள் மற்றும் 40 பேரை கொண்ட குழுக்களால் நீதிமன்ற தீர்ப்பையும் மீறி தொல்பொருள் திணைக்களம் அல்லது வனப் பாதுகாப்புத் திணைக் களத்தின் அனுமதியின்றி நேற்று (08) இரவு நேரத்தில் யாகம் செய்து விஷேட சிவராத்திரி பூஜைகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரவு கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் அவ்வாறு செய்ய வேண்டாம் என தெரிவித்தபோதிலும் அவர்கள் அதனையும் மீறி தொடர்ந்து செயற்பட்டதுடன், நீதிமன்ற தீர்ப் பையும் மீறி நாட்டில் நிலவும் வறட் சியான காலநிலை காரணமாக வனப் பிரதேசத்தினுள் யாக பூஜைகள் நடாத்துவதன் ஊடாக வனப் பிரதேசத்தில் தீ ஏற்பட்டு, அழிவடைவதற்கான சந்தர்ப்பம் உள்ளதால் வனப் பிரதேசத்தில் அத்துமீறி பிரவேசித்தமை மற்றும் சட்ட முரணற்ற வகையில் ஒன்று கூடிய மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனும் குற்றத்தின் கீழ் பிரதான பூசகருடன் 08 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன்குளம், மாமடுவை ஆகிய பிரதேசத்தில் வசிக்கும் 24, 29, 30, 34, 37 வயதுடையவர்கள். - எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## இரசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சுரண்டுவதில்நமதுமாநகரசபைநிர்வாகம் தனிப் பட்டம் வாங்கும் தகுதி உடையது.

ஆனால், யாழ். நகரத்தில் இப்போது ஐந்து நாள்களாக பெரிய அற வீட்டுக் களியாட்டம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது, அந்தப்பக்கம் மட்டும் மாநகரசபை வசூல் ராஜாக்களைக் காணவில்லை. வாலைச் சுருட்டியபடி பம்மிக் கொண்டிருக்கின்றார்கள்.

உள்ளூர் வரத்தகர்கள் முற்பணம் செலுத்தினாலேயே வர்த்தகக் கண்காட்சி, களியாட்டம் நடத்த அனுமதிக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை இப்போது யாழ் நகரத்தில் விமானப் படையினர் நிதி அறவிட்டு நடத்தும் எந்த நிகழ்விற்கும் இதுவரை நிதி அறவிடவேயில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

உள்ளூர் வர்த்தகர்கள், நடமாடும் வியாபாரிகள், கண்காட்சிகள் எது நடாத்தினாலும் அவற்றிற்கு மாநகர சபை நிதி அறவிடுவது வழமை. அதில் மூன்றில் ஒரு பங்கை முற்பணமாகவும் கோருகின்றனர். முற்பணத்திலும் அறவீட்டிலும் அவர்கள் வலு கறார். இதே போன்று அனுமதிக்காக விநியோகிக்கப் படும் நுழைவுச் சிட்டைகளை மாநகர சபையில் முற்கூட்டியே வழங்கி றப்பர் முத்திரை பொறித்து அனுமதி பெற வேண்டும். அந்தச் சிட்டைக் கட்டணத்தில் 12 வீதம் மாநகரசபைக்குச் செலுத்தவும் வேண்டும்.

இந்த நிலையில் இன்றுடன் 5 தினங்களாக மாநகர சபையின் எல்லைப் பரப்பில் விமானப் படையினரின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்காட்சி, விற்பனைகள், படப் பிடிப்புக்கள், களியாட்டங்கள் என அனைத்தும் இடம்பெறுகின்றன. நுழைவு அனுமதிச் சிட்டை 100 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. சனம் பிய்த்துக் கொண்டு போகிறது. இவை எவற்றிற்கும் மாநகர சபையினால் கட்டணமோ, நிதியோ அறவிடப்படவேயில்லை என்பது மட்டுமன்றி நுழைவு சிட்டையில் மாநகர சபையின் றப்பர் முத்திரையும் பொறிக்கப்படவில்லை என்பதும் சுட்டிக் காட்டப் படுகின்றது.

கண்காட்சி இடம்பெறும் பிரதேசத்திற்குள் 27 கொட்டகைகளில் வர்த்தக நிலையங்களும் இயங்குகின்றன.

இவை தொடர்பில் மாநகர சபை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவை அனைத்தும் ஆளுநரின் அனுமதியின் பெயரில் இயங்குகின்றபோதும் விற்பனைக் கூடங்களிற்காக விமானப் படையினருக்கு கடிதம் அனுப்பி வைக்கப் படுகின்றது எனப் பதிலளிக்கின்றனர்.

பணம் வந்தால் கண்டு கொள்ள வேண்டியதுதான் என்ற போக்கில் இருந்தது அந்தப் பதில்.

படை என்றால் மாநகர சபையும் (பயந்து) மனமிறு/ற்)ங்கும் போல....!

## துப்பாக்கிச் சூட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வெடுக்குநாறிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றபோது சப்பாத்துக் கால்களுடன் ஆலயத்துக்குள் நுழைந்த பொலிஸார், ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர்.

மேற்படி 8 பேரையும் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் நெடுங்கேணி பொலிஸார் நேற்று மாலை முன்னிலைப் படுத்தினர். இதன்போது ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேர் சார்பாக சட்டத்தரணிகளான க.சுகாஸ், தி.திருஅருள், அ.திலீப் குமார் உள்ளிட்ட குழுவினர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இது தொடர்பில் சட்டத்தரணி தி.திருஅருள் கருத்துத் தெரிவிக்கையில்,

"வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். குறித்த வழக்கு தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுவதால் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளமை தொடபில் மன்றுக்குத் தெரிவித்தமையால் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துவதற்காகவும் திகதியிடப்பட்டது." – என்றார்.

குறித்த வழக்கு விசாரணை இடம்பெற்றபோது நீதிமன்றம் முன்பாக வேலன் சுவாமிகள், ஆலய நிர்வாகத்தினர் உள்ளிட்ட பலரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







## பொலிஸ் அராஜ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மகா சிவராத்திரி வழிபாட்டின்போது தமிழர்கள் மீது பொலிஸார் புரிந்த அட்டூழியங்களைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட 8 தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் யாழ். நல்லை ஆதீன முன்றலில் நாளை மாலை 4 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும், அதில் அனைவரையும் அணிதிரளுமாறும் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு சார்பாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

"நேற்றுமுன்தினம் வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோயிலில் மகா சிவராத்திரி வழிபாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

சைவர்களின் வழிபாட்டு உரிமை மிகப் புனிதமான விரத நாளில் அப்பட்டமாக மறுக்கப்பட்டு மிக மோசமாக சைவ சமய விழுமியங்களைப் புனித சடங்குகளை அவமதிக்கும் சம்பவங்கள் அரங்கேறியிருக்கின்றன.

அதன் உச்சக்கட்டமாகத் தவறேதும் செய்யாத சிவனடியார்கள் எண்வர் விரதமிருந்து பூஜையில் ஈடுபட்ட தருணம், மோசமாகத் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பூஜை மற்றும் படையல் பொருள்கள் சப்பாத்துக் கால்களால் சீருடை தரித்த நபர்களால் தட்டி அகற்றப்பட்டதுடன் பூசகர் சிவத்திரு மதிமுகராசா மீளவும் கைது செய்யப்படுள்ளார். அவருடன் மேலும் எழுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த ஈனச் செயல்கள் மிகப் பாரதூரமாக சைவத்தமிழர்களின் மனதைக் காயப்படுத்தியுள்ளதுடன் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயல் என்பதை உலகுக்கும் அரச உயர்பீடத்துக்கும் சொல்ல வேண்டியது ஒவ்வொரு தமிழர்களினதும் கடமையாகும்.

உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையான விரதம் மகா சிவராத்திரி ஆகும்.

அந்தவகையில் இந்த மகா சிவராத்திரி தினத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோயிலில் நடைபெற்ற மோசமான சம்பவங்களைக் கண்டித்தும் கைது செய்யப்பட்ட பக்தர்களை உடனடியாக விடுவிக்கக் கோரியும் நாம் அணிதிரண்டு எதிர்ப்பைப் பதிவு செய்வோம்" – என்று அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஓட்டோவில் கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரதேசத்தில் வைத்துப் பலாத்காரமாக அழைத்துச் சென்றிருந்தனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்படாத நிலையில், இது தொடர்பில் எல்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணவியின் சடலம், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.





# ரணிலை ‘மொட்டு’ ஆதரிக்குமா? அடுத்த சந்திப்பில் இறுதி முடிவு

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியிலான பிரச்சினை உள்ளது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும், ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷவும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தியதாகவே இந்தச் சந்திப்பு நடைபெற்றது. ஜனாதிபதி பணியாட்தொகுதி பிரதானி சாகல ரத்நாயக்கவும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றார்.

“அதிகாரப் பகிர்வு மற்றும் அரச சொத்துக்களைத் தனியார் மயப்படுத்தல் போன்ற செயற்பாடுகளால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முடியாத கொள்கை ரீதியிலான பிரச்சினை உள்ளது.” – என்று இதன்போது ராஜபக்ஷக்கள் இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொலிஸ் அதிகாரத்தைத் தவிர ஏனைய அதிகாரங்களைப் பகிர்வது பிரச்சினை அல்ல என்றும், சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியது கட்டாயம் என்றும் இதற்கு ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாமை தொடர்பிலும் ராஜபக்ஷ தரப்பில் இருந்து அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ரணிலை ஆதரிக்கும் முடிவை மோட்டுக் கட்சி உறுப்பினர்கள் எடுக்கும் பட்சத்தில் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் வெற்றிக்காக உழைத்தது போல் ரணிலின் வெற்றிக்காக உழைப்பதற்குத் தான் தயார் என இதன்போது பஸில் கூறியுள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

மேற்படி சந்திப்பில் இறுதி இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. எனினும், மீண்டும் இரு தரப்பினரும் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள இரண்டாவது சந்திப்பின்போது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மொட்டுக் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி ரணிலை ஆதரிக்குமா அல்லது வேட்பாளர் ஒருவரை நிறுத்துமா என்பதும் அந்தக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படவுள்ளது.



**கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற கொழும்பு - றோயல் மற்றும் தோமியன் கல்லூரிகளுக்கு இடையிலான் மாபெரும் கிரிக்கெட் போட்டியைப் பார்த்து இரசித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோர்....**




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தேர்தல் சீர்திருத்தம் சாத்தியமா?

நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் 225 உறுப்பினர்களில் 160 பேரை வாக்காளர்கள் தேர்தல் தொகுதிகளில் இருந்து நேரடியாக தெரிவு செய்யும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்ய அரசாங்கம் தயாராகி வருகின்றது என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் 99 ஆவது ஷரத்திற்கு அமைய விகிதாரசார அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டு, விருப்பு வாக்குகளின் அடிப்படையில் உறுப்பினர்கள் தற்போது நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

தற்போதைய முறைமையின் கீழ் நாட்டில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் 196 உறுப்பினர்கள் மாவட்ட ரீதியான விகிதாரசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையிலும், எஞ்சிய 29 உறுப்பினர்கள் முழு நாட்டினதும் தேசிய ரீதியான விகிதாரசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இதனை மாற்றியமைக்கவே தற்போது திட்டமிடப்படுகின்றது.

பொதுத் தேர்தலில் ஒரு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அந்த மாவட்டம் முழுவதும் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அதற்கு அதிகளவில் பணத்தை செலவிடவும் நேரிடுகின்றது. இதனால் பல சமயங்களிலும் வேட்பாளர்கள் சட்டவிரோதமான முறையிலும் நிதியைத் திரட்ட வேண்டியுள்ளது. பின்னர், தேர்தல் நிதியை வழங்கியவர்களின் சட்டவிரோத செயல்களுக்கும் உதவும் நிலைமைக்கு மக்கள் பிரதிநிதிகள் தள்ளப்படுகின்றனர்.

இதன் காரணமாகவே தற்போது நடைமுறையில் இருக்கும் தேர்தல் முறையில் மாற்றங்களைச் செய்யும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று தற்போது வெளியாகும் செய்திகளில் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை பெற்று அறிக்கை ஒன்றை தாக்கல் செய்வதற்கு அமைச்சரவை உப குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகளை முன்வைத்துள்ள பெரும்பான்மையானவர்கள் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 160 பேரைத் தொகுதிகள் ஊடாகத் தெரிவு செய்யும் முறைமைக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். ஏனைய 65 பேரை விகிதாசார அடிப்படையில் தேசிய அல்லது மாகாண மட்டத்தில் தெரிவு செய்யும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

இதனடிப்படையில், நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியல் சாசன மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்வது தொடர்பான யோசனையை முன்வைத்துள்ளார்.

இது ஒன்றும் இப்போது புதிதாக மேற்கொள்ளப்படும் - முன்னெடுக்கப்படும் - திட்டமோ யோசனையோ அல்ல.

தொகுதிவாரி தெரிவுமுறை நீக்கப்பட்ட காலத்திலிருந்தே, அவ்வப்போது சுட்டிக் காட்டப்படும் திருத்தமும் யோசனையும் இது.

இதனைச் செய்வதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அவசியம்.

ஏற்கனவே ஐந்து, ஆறு ஆண்டுகளாக நடத்தப்படாமல் தடைப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் முறைகளுக்கு மாற்று முறையை ஏற்படுத்தவே இணக்கம் வராத நிலையில், பொதுத்தேர்தலை நடத்தும் முறையை மாற்றுவதற்கான இணக்கம் இப்போது குழம்பிப் போய்நிற்கும் இந்த நாடாளுமன்றத்தில் கிட்டுவது பெரும்பாலும் அசாத்தியமே. அடுத்த பொது தேர்தலுக்கு முன்னர் அத்தகைய தேர்தல் சீர்திருத்த மாற்றம் ஒன்று வருவதற்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு.

# நாங்கள் 5 ஆண்டுகளில் செய்ததை காங். செய்ய 20 ஆண்டுகள் ஆகும்

## பிரதமர் மோடி தெரிவிப்பு

"வட கிழக்கில் கடந்த 5 ஆண்டுகளில் நாங்கள் செய்திருப்பதை காங்கிரஸ் கட்சி செய்து முடிக்க 20 ஆண்டுகள் எடுத்திருக்கும்."

– இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

அருணாச்சலப் பிரதேசத்தின் தாவாங் சேலா சுரங்கப்பாதை உள்ளிட்ட 55,600 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். இட்டா நகரில் நடந்த அந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவின் சுற்றுலா, வணிகம் மற்றும் பிற உறவுகளுக்கான இந்தியாவின் முக்கிய இணைப்பாக வடகிழக்கு மாறும். இன்று இங்கு 55,600 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்கில் கடந்த 5 ஆண்டுகளில் நாங்கள் செய்திருக்கும் வளர்ச்சித் திட்டங்களைச் செய்ய காங்கிரஸ் கட்சி 20 ஆண்டுகள் எடுத்திருக்கும். மோடியின் உத்தரவாதம் என்ன என்பதை தெளிவாக தெரிந்துகொள்ள அருணாச்சலப் பிரதேசத்துக்கு வந்து பார்க்க வேண்டும்.

மோடியின் உத்தரவாதம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை




ஒட்டுமொத்த வடகிழக்குமே பார்த்துக் கொண்டிருக்கிறது. நாட்டின் வளர்ச்சிக்காக நான் பாடுபடுவதால் 'இண்டியா' கூட்டணித் தலைவர்கள் என் மீது தாக்குதல் தொடுக்கிறார்கள்." – என்றார்.

# மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் தேர்தல்கள் ஆணையர் திடீர் இராஜினாமா

மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தேர்தல் ஆணையர் அருண் கோயல் தனது பதவியை திடீரென இராஜினாமா செய்துள்ளார். அவரின் இராஜினாமாவை குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொண்டுள்ளார் என அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், தேர்தல் ஆணையர் அருண் கோயல் தனது பதவியை இராஜினிமா செய்துள்ளார். அவரது பதவிக்காலம் 2027 ஆம் ஆண்டு வரை உள்ள நிலையில் அவர் திடீரென இராஜினாமா செய்துள்ளமை அரசியல் பரப்பை பரபரப்பாக்கியுள்ளது.

அவரின் இராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுக்கொண்டார் என்றும் நேற்று முதலே அவர் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் எனவும் அதிகார பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார் அஜித் தொலைபேசியில் நலம் விசாரித்தார் நடிகர் விஜய்

அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நடிகர் அஜித்குமார் நலமுடன் நேற்று வீடு திரும்பினார். மேலும், அவரது உடல்நலம் குறித்து நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் தொலைபேசியில் கேட்டறிந்துள்ளார்.

நடிகர் அஜித்குமார் தற்போது இயக்குநர் மகிழ்திருமேனி இயக்கத்தில் 'விடாமுயற்சி' படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். இதற்கான முதல் கட்ட படப்பிடிப்பு அஜர்பைஜானில் நடைபெற்று அண்மையில் அஜித் சென்னை திரும்பினார். இதையடுத்து அவர் சென்னை அப்போலோ மருத்துவமனையில் வழக்கமான பரிசோதனைக்குச் சென்றபோது, மூளையில் இருந்து காதுக்கு வரும் நரம்பில் வீக்கம் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது.

இதை எப்போது வேண்டுமானாலும் சரி செய்துகொள்ளலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். அஜித்குமார் உடனடியாக செய்துவிடலாம் என்றார். இதையடுத்து அவருக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், நேற்று அவர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார். இது தொடர்பாக அஜித்குமாரின்



மேலாளர் சுரேஷ் சந்திரா கூறும்போது,

"மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியுள்ள அஜித் நலமுடன் உள்ளார். நடிகர் விஜய் தொலைபேசியில் தொடர்புகொண்டு அஜித்திடம் நலம் விசாரித்தார்" – என்றார்.

# 2024 அழகி பட்டத்தை வென்றார் செக் குடியரசை சேர்ந்த கிறிஸ்டினா



2024ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் பட்டத்தை செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா வென்றுள்ளார்.

லெபனான் நாட்டைச் சேர்ந்த யாஸ்மினா ஸைத்தோன் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.

71 ஆவது உலக அழகிப் போட்டி மும்பையில் உள்ள ஜியோ கன்வென்ஷன் மையத்தில் நடைபெற்றது. 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவில் நடக்கும் உலக அழகிப் போட்டி இதுவாகும். நேற்று மாலை 7.30 மணிக்கு தொடங்கிய இந்த போட்டியை இயக்குநர் கரண் ஜோஹர் தொகுத்து வழங்கினார்.

இந்த போட்டியில் செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பிஸ்கோவா என்ற பெண் உலகி அழகியாக அறிவிக்கப்பட்டார். இவர் 115 நாடுகளைச் சேர்ந்த அழகிகளை எதிர்த்து போட்டியிட்டார்.

கடந்த ஆண்டு உலகி அழகிப் பட்டம் வென்ற போலந்து நாட்டைச் சேர்ந்த கரோலினா பிலாவ்ஸ்கா கிறிஸ்டினாவுக்கு மகுடம் சூட்டி கௌரவித்தார். 24 வயதாகும் கிறிஸ்டினா, மொடலாக இருந்து கொண்டே, சட்டம் மற்றும் வணிக நிர்வாகம் ஆகிய இரண்டிலும் படப்படிப்பை மேற்கொண்டு வருகிறார்.

இந்த ஆண்டு உலக அழகிப் போட்டியில் இந்தியாவின் சார்பில் போட்டியிட்ட சினி ஷெட்டி என்ற பெண், லெபனான் அழகி யாஸ்மினிடம் தோல்வியடைந்து வெளியேறினார். சினி ஷெட்டி முதல் 8 இடங்கள் வரையில் முன்னேறியிருந்தார்.

# காஸாவில் பாரசூட் வீழ்ந்து விபத்து: 5 பேர் உயிரிழப்பு, பலர் படுகாயம்





காஸாவின் வடக்கு பகுதியில் வான்வழியாக மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்ட போது ஏற்பட்ட பாரசூட் விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். 10 பேர் காயமடைந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது.

காஸாவின் வடக்கில் ஷாதி என்ற பகுதியில் பாரசூட் மூலம் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. இதன்போது, பாரசூட் ஒன்று பழுதாகி உணவுப் பொருள்களுடன் மக்கள் கூடியிருந்த பகுதியில் வீழ்ந்துள்ளது.

இதில் 5 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். உணவுப் பொதிகள் மக்களின் தலையில் வீழ்ந்து பலர் காயமடைந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் காஸாவின் அல் ஷிஃபா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கோர விபத்து கடலோரத்தில் உள்ள அல் – ஷாதி அகதிகள் முகாமுக்கு அருகில் நடந்ததாக மருத்துவமனையின் தலைமை தாதி முகம்மது ஷேக் தெரிவித்துள்ளார்.

ஐந்து மாதங்களுக்கு மேலாக போர் நீடித்து வரும் வடக்கு காஸாவில் ஆயிரக்கணக்கான மக்கள் மோசமான நிலையில் உள்ளனர். அங்குள்ளவர்களுக்கு அமெரிக்காவும் ஜோர்தானும் வான்வழியாக உதவிகளை வழங்கி வருகின்றன.

ஐந்து பேர் கொல்லப்பட்ட பாரசூட் விபத்து குறித்து காஸாவில் உள்ள ஹமாஸ்களின் அரச ஊடக அதிகாரி ஒருவர் கூறுகையில்,

"வான்வழியாக உதவிகள் வழங்குவது பயனற்றவை. உதவிகள் வழங்குவதற்கு சிறந்த வழி இல்லை" என்றும் தெரிவித்தார்.

இதனிடையே, வான்வழியாக உதவிகள் வழங்குவதோ அல்லது கடல்வழியாக உதவிகள் வழங்குவதோ காஸாவிற்கு தரைவழியாக உதவிகள் வழங்குவதற்கான மாற்றாக இருக்க முடியாது என்றும் எல்லை வழியாக லொறிகள் மூலம் உதவிகள் வழங்கப்படுவதை அனுமதிக்க வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.





# மல்லாகம் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள் மீது நடவடிக்கை!

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கு, 73 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ள நீதிமன்று அந்த உணவகத்தையும் சீல் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பகுதியில் பொது சுகாதார பரிசோதகரான செ. பிரின்சன் தலைமையில் உணவகங்களில் திடீரென மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, 180 கிலோ பழுதடைந்த ரொட்டிகள், 05 கிலோ இடியப்பம் மற்றும் 08 கிலோ பிட்டு என்பவற்றை பொலித்தீன் பைகளில் கட்டி குளிர்சாதன பெட்டிகளில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

அந்த உணவகத்திற்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், உணவக உரிமையாளருக்கு 73ஆயிரம் ரூபா தண்டம் விதித்த மன்று, உணவகத்தை சீல் வைத்து மூடுமாறும் உத்தரவிட்டது.

அதேவேளை, பழுதடைந்த இறைச்சி மற்றும் இறால் ஆகியவற்றை களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பிறிதொரு உணவக உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டமும், பழுதடைந்த இறைச்சி, றொட்டியை விற்பனைக்கு வைத்திருந்தமை மற்றும் உணவகத்தை சுத்தமின்றி பேணிய மற்றுமொரு உணவக உரிமையாளருக்கு 33 ஆயிரம் ரூபா தண்டமும் நீதிமன்று விதித்துள்ளது.

அதேவேளை மல்லாகம் நீதவான் நீதிமன்று நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட 06 பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளில் சுமார் 03 லட்ச ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ள நிலையில், சில உணவகங்களை சீல் வைத்து மூடுமாறும் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.









# ராஜபக்ஷக்களைச் சுற்றிவரும் தென் இலங்கை அரசியல்!

தென் இலங்கை அரசியல் இன்னமும் ராஜபக்ஷக்களையே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றது. அறகலய (போராட்டம்) மூலம் ராஜபக்ஷக்கள் வீட்டுக்கு விரட்டப்பட்டாலும், ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் வல்லமையோடுதான் அவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். அல்லது, இழந்த ஆட்சி அதிகாரத்தை குறுகிய காலத்துக்குள் மீட்டுக்கொள்ளும் ஓர்மத்தோடு அவர்கள் வலம் வருகிறார்கள். இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சி பீடமேற்றியதும், அவரின் பதவியை நாடாளுமன்றத்துக்குள் வைத்து உறுதி செய்ததும் ராஜபக்ஷக்களே. இந்த வாரமும் இரு ராஜபக்ஷக்களின் செயற்பாடுகள் பெரும் கவனம் பெற்றிருந்தன.

பொதுஜன பெரமுனவின் நிறுவுனரான பஸில் ராஜபக்ஷ, அமெரிக்காவில் இருந்து சில மாதங்களுக்குப் பின்னர், இந்த வாரம் நாடு திரும்பியிருந்தார். அவரின் வருகைக்காக தென் இலங்கை அரசியல் அரங்கு பெரும் ஏக்கத்தோடு காத்திருந்தது. அதுபோல, பதவியில் இருந்து துரத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி'என்ற நூலை இந்த வாரம் வெளியிட்டிருந்தார்.

வயது மூப்பு மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக மஹிந்த ராஜபக்ஷ அரசியல் களத்தில் தீர்மானங்களை எடுக்கும் கட்டத்தில் இருந்து 2018களுக்குப் பின்னர் இளைய சகோதரர்களான ராஜபக்ஷக்களினால் மெல்ல விலக்கப்பட்டிருந்தார்கள். அதன் விளைவே, ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டம் தென் இலங்கையில் மேலெழுந்தது என்று சொல்லப்படுவதுண்டு. ஏனெனில், பஸில், கோட்டா ஆகியோர் பாரம்பரிய அரசியலில் இருந்தவர்கள் அல்ல. அவர்கள், மஹிந்த ஆட்சிக்கு வந்ததும் அதிகாரத்தோடு வலம் வந்தவர்கள். அதுவும் அதீத ஆயுத படைபலம் மற்றும் பண பலத்தினை முன்னிறுத்தி தீர்மானங்களை எடுத்தவர்கள். ஆனால், மஹிந்தவுக்கு நீண்ட அரசியல் வரலாறு உண்டு. அவர் வெற்றிகளையும் தோல்விகளையும் சரிவர சுவைத்தவர். அரசியலில் நீடித்திருத்தல் என்பது, தோல்விகளில் துவண்டு விடாமல் இருப்பது மற்றும் சந்தர்ப்பங்களுக்காக காத்திருந்து, அதனை கையாண்டு வெற்றிபெற வேண்டும் என்ற அடிப்படையைப் புரிந்தவர். அவரிடத்தில் நிரந்தர எதிரியும் இல்லை, நண்பனும் இல்லை. ஆனால், பஸில், கோட்டா சகோதரர்கள் பாரம்பரிய அரசியலுக்கு பழக்கப்படாதவர்கள் என்பதால், அவர்கள் எதிரிகளையும் வாழ்நாள் வைரிகளாகவே பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். அரசியல் தீர்மானங்களும் அப்படியான அணுகுமுறையோடுதான் கடந்த காலத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் விளைவுகள்தான், அறகலய மேலெழுந்து ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டியடித்தது. ஆனாலும், இன்னமும் பெரமுன சார்பிலான முடிவுகளை எடுக்கும் முக்கிய நபராக மஹிந்தவைத் தாண்டி பஸில் ராஜபக்ஷ இருக்கிறார். அதனால்தான், அவரின் நாட்டுக்கான வருகை தென் இலங்கையினால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. அவர், எப்போது அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பப்போகிறார் என்பதற்கான பரபரப்பு என்பது சில மாதங்களாகவே தொற்றிக் கொண்டிருந்தது. ஏனெனில், அவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய வேட்பாளர் ஒருவரை தீர்மானிக்கும் வல்லமையுள்ளவராக பார்க்கப்படுகின்றார்.



புருஜோத்தமன் தங்கமயில்

பஸில் நாடு திரும்பிய சில நாள்களுக்குள்ளேயே அவருக்கும் ரணிலுக்கும் இடையில் இரண்டு சந்திப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன எனத் தெரிகின்றது. இந்தச் சந்திப்புக்களில் ரணிலைத் தாண்டிய நிலையில் ராஜபக்ஷக்கள் ஆளுமையான உரையாடல்களைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, நாட்டின் நிதி நிலையைச் சீராக்குவதாக கூறிக் கொண்டு உள்நாட்டு வளங்களையும் சொத்துக்களையும் வெளிநாடுகளுக்கு விற்கும் வேலைகளில் ரணில் அரசாங்கம் ஈடுபடுவதான குற்றச்சாட்டை ராஜபக்ஷக்கள் முன்வைத்திருக்கிறார்கள். இனியும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு நாடாளுமன்றத்துக்குள் ஒருபோதும் தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்று ராஜபக்ஷக்கள் ரணிலிடம் கூறியிருக்கிறார்கள். இது, அடிப்படையில் நாட்டு வளங்களையும் சொத்துக்களையும் வெளிநாடுகளுக்கு விற்பதற்கு எதிரான மனநிலையில் இருந்து வந்தது என்று நோக்கப்பட வேண்டியதில்லை.

தொடர்ச்சி▼



# ராஜபக்ஷக்களைச் சுற்றிவரும் தென் இலங்கை அரசியல்!

தொடர்ச்சி▲

மாறாக, தங்களின் நிலைப்பாடுகளை மதிக்காது ரணில் தொடர்ந்தும் செயற்பாட்டால், தென் இலங்கையில் தாங்கள் என்ன மாதிரியான அரசியல் நிலைப்பாட்டை முன்னெடுக்கப் போகின்றோம் என்பதையே ராஜபக்ஷக்கள் எச்சரிக்கையாக முன்வைத்திருக்கிறார்கள். அதாவது, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்கள் யாரும் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்துக் கொண்டே பஸில் நாடு திரும்பினார். அப்படியான நிலையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு அவர்களுக்கு ரணிலைத் தவிர வேறு யாரும் இல்லை. அதேவேளை, தங்கள் முன்னால் தன்னை விட்டால் வேறு தெரிவில்லை என்பதற்காக ரணில், பெரமுனவை சூறையாடுவதையும் ராஜபக்ஷக்கள் அனுமதிக்க விரும்பவில்லை. ஏற்கனவே, பெரமுனவில் நாற்பதுக்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், நிமல் லன்ஸா ஒருங்கிணைப்பில் ரணில் பக்கம் இருக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால், பெரமுனவை ரணில் இன்னும் இன்னும் மோசமாக உடைப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அதனால், அதனை இப்போதாவது தடுக்காவிட்டால், பெரமுன என்ற கட்சி காணாமல் போய்விடும் என்பது ராஜபக்ஷக்களின் பேரச்சம். அதனால்தான், நிபந்தனையுடனான இணக்கப்பாடொன்றை ரணிலோடு ஏற்படுத்துவதற்காக ராஜபக்ஷக்கள் முயற்சிக்கிறார்கள். அதன் பிரகாரம் ஜனாதிபதி வேட்பாளராக ரணிலை தாங்கள் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, ஆட்சியில் தங்களுக்கான பங்கினை உறுதிப்படுத்த நினைக்கிறார்கள். அது, பிரதமர் பதவியில் மீண்டும் ராஜபக்ஷக்களை உட்கார வைப்பதற்கான அடிப்படையிலானது. அவ்வாறான சம்பவம் நிகழ்ந்தால்தான், 2029 ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களில் ஒருவர் வேட்பாளராக எழுவதற்கான வாய்ப்பு உருவாகும். அந்த இலக்கை நோக்கி பஸிலும் மஹிந்தவும் கவனம் செலுத்துகிறார்கள். 2029 ஜனாதிபதித் தேர்தலை நாமல் ராஜபக்ஷவுக்கானது என்று மஹிந்த நினைக்கிறார். பஸிலோ, அதனை தனக்கானதாக்க நினைக்கிறார். அதேவேளை இந்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்கள் தனித்து நின்றால், தங்களினால் வெற்றிபெற முடியாது என்ற உண்மையையும் உணர்ந்து வைத்திருக்கிறார்கள். அதனால், ரணில் என்ற முகத்துக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டு, தங்களை பலப்படுத்த நினைக்கிறார்கள்.

ரணிலைப் பொறுத்தளவில், அவரின் ஐக்கிய தேசியக் கட்சி என்பது வாளற்ற உறை போன்றது. அங்கு, வாக்குகளைத் திரட்டுவதற்கான ஆளுமையுள்ள தலைவர்கள் என்று யாரும் இல்லை. ரணில் கூட கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தவர். அதுவும், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தோற்றவர். அப்படிப்பட்ட நிலையில், தென் இலங்கைக் கிராமங்களில் வாக்குகளைக் கவர்ந்து வருவதற்கு இன்னமும் ராஜபக்ஷக்கள் வல்லமையுடையவர்கள் என்பது ரணிலுக்குத் தெரியும். இந்தக் கட்டத்தில்தான், ராஜபக்ஷக்களோடு இணக்கப்பாட்டினூடு ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ள நினைக்கிறார். அதேவேளை, வடக்கு கிழக்கில், குறிப்பாக தமிழ் மக்களை ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கப் பண்ணுதல் அல்லது தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தி, தமிழ் மக்களின் வாக்குகளை சஜித் பிரேமதாஸவுக்குச் செல்லாது தடுக்க நினைக்கிறார். இந்த நிலையை உறுதிப்படுத்தினால், தன்னால் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியும் என்பது ரணிலின் எதிர்பார்ப்பு. அவரிடத்தில் இழப்பதற்கு ஏதுமில்லை என்ற நிலையில், இறுதியாக எப்படியாவது ஆடி ஜனாதிபதிப் பதவியில் தொடர நினைக்கிறார். அதற்காக, ராஜபக்ஷக்களுடன் இணக்கப்பாட்டுக்கு செல்வதற்கும் அவர் தயாராகவே இருக்கிறார். அதாவது, ரணிலும் ராஜபக்ஷக்களும் இருதரப்புக்குமான வெற்றி என்ற நிலைப்பாட்டை முன்வைத்து ஒருங்கிணையப் போகிறார்கள்.

இன்னொரு பக்கம், ராஜபக்ஷக்களின் அரசியல் என்பது பௌத்த – சிங்கள அடிப்படைவாதத்தைத் தூண்டி அதிலிருந்து வாக்கு அறுவடை செய்வதாகும். அதனை, கடந்த காலங்களில் செய்த அளவுக்கு இப்போது செய்ய முடியாது என்பதுவும் அவர்களுக்கு தெரியும். அதனால்தான், அவர்கள் இப்போது, கோட்டாவை வைத்து நூலினை வெளியிட வைத்திருக்கிறார்கள். 'ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி' என்ற கோட்டாவின் நூலில் இரண்டு முக்கிய விடயங்கள் கோடிக்காட்டப்படுகின்றன. அதில். முதலாவது அறகலய (போராட்டம்)

தொடர்ச்சி▼



# ராஜபக்ஷக்களைச் சுற்றிவரும் தென் இலங்கை அரசியல்!

**தொடர்ச்சி▲**

தமிழ் – முஸ்லிம் சிறுபான்மையின மக்களினால் முன்னெடுக்கப்பட்டது. இரண்டாவது, ராஜபக்ஷக்களை ஆட்சியில் அகற்றுவதற்காக அறகலயவுக்கு வெளிநாடுகள் ஒத்துழைத்து, சதி முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன என்பது. பிரிவினைவாதத்தை அழித்தொழித்து நாட்டை மீட்டெடுத்த ராஜபக்ஷக்கள் மீது தமிழ்த் தரப்புக்களுக்கு தொடர்ச்சியான எதிர்ப்புணர்வு உண்டு. அதனால் அறகலயவை அவர்கள் கையகப்படுத்தினார்கள். முஸ்லிம் மக்களைப் பொறுத்தளவில் பொதுபல சேனா உள்ளிட்டவை தன்னுடைய காலத்தில் எழுந்தவை மற்றும் கோவிட் காலத்தில் முஸ்லிம்களின் ஜனஸாக்களை எரித்த விடயமும் தனக்கு எதிரானதாக மாறியதாக கோட்டா கூறுகிறார். அதனால், முஸ்லிம்கள் அறகலயவில் பங்களித்து தன்னை வெளியேற்றுவதற்கு ஒத்துழைத்தார்கள் என்கிறார். ஆனால், தென் இலங்கை சிங்கள மக்கள் ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டுவதற்கான வீதிகளில் இறங்கியவை பற்றி அவர் பெரிதாக எந்த விடயத்தையும் குறிப்பிடவில்லை. அவரின் இந்த நூலின் மூலமும், 2019ஆம் ஆண்டு தென் இலங்கை சிங்கள மக்கள் பெருவாரியான வாக்கு வித்தியாவத்தில் வெற்றிபெற வைத்த தன்னை, தமிழ் – முஸ்லிம் மக்கள் அறகலய மூலம் வெளியேற்றிவிட்டார்கள் என்று அவர் இனவாத கொடுக்கைத் திறக்கிறார். அந்தக் கொடுக்கு வழக்கம் போல நச்சு நிறைந்தது. ஆபத்தானது.

அறகலயவின் எழுச்சி தென் இலங்கை சிறு நகரங்களும் பெருநகரங்களும் ஒரே தருணத்தில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக எழுந்ததினால் நிகழ்ந்தது. அது, ஒரு கட்டத்தில் சின்னஞ்சிறு சிங்கள கிராமங்கள் வரை படர்ந்தது. அந்தப் பகுதியில் ராஜபக்ஷக்கள் அணியில் இருந்த அரசியல்வாதிகள் பதுங்கிக் கொள்ளும் அளவுக்கு நிலை இருந்தது. அதேவேளை, வடக்கு,கிழக்கில் பெரிய போராட்டங்கள் எவையும் எழுந்திருக்கவில்லை. குறிப்பாக, அறகலய போராட்டம் என்பது தென் இலங்கை மக்களினால் ராஜபக்ஷக்களுக்கு எதிராக நிகழ்ந்தப்படுவதான உணர்வே பெரும்பாலும் இருந்தது. கிட்டத்தட்ட பார்வையாளர் மனநிலையில் இருந்துதான் வடக்கு – கிழக்கு மக்கள் அறகலயவை அணுகினார்கள். அப்படிப்பட்ட நிலையில், அறகலயவை தமிழ் – முஸ்லிம் மக்களின் ராஜபக்ஷக்களுக்கு எதிரான வெறுப்புணர்வு என்ற வரையறைக்குள் அடக்க கோட்டா முயற்சிப்பது அபத்தமான வாதம். ஆனால், அப்படியான அபத்த வாதங்களையே தென் இலங்கையில் இனவாதத்தைத் தூண்டுவதற்காக ராஜபக்ஷக்கள் ஒவ்வொரு கட்டத்திலும் முன்வைத்து வந்திருக்கிறார்கள். இப்போதும் அதனையே செய்கிறார்கள். மஹிந்த பெருந்தலைவர் வேடத்தோடு இருக்க, பஸில் பொதுஜன பெரமுனவைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட, கோட்டா இனவாதத்தை தூண்டுகிறார். ராஜபக்ஷ சகோதரர்கள் நன்கு திட்டமிட்ட ரீதியில் தென் இலங்கை அரசியலை தங்களில் கட்டப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள தெளிவான முன்னெடுப்புக்களோடு முனைகிறார்கள்.

ராஜபக்ஷக்களின் அரசியல் என்பது பெரும்பாலும் நாட்டுக்கு பெரும் கேடாக இருந்திருக்கின்றது. மனிதப் பேரழிவுகளையும், பொருளாதார சிதைப்பையும் செய்தவர்கள். நாட்டின் சொத்துக்களை அளவு கணக்கின்றி கொள்ளையடித்தவர்கள். வெறுப்பு பிரச்சாரத்தின் வழியாக ஆட்சிக்கு வர முடியும் என்பதை திரும்ப திரும்ப நிரூபித்தவர்கள். இவ்வாறான படுமோசமான விடயங்களுக்கு ராஜபக்ஷக்கள் பெரும் உதாரணங்கள். அதேவேளை, அரசியலில் தோல்வியால் சோர்ந்துபோய் ஒதுங்கக் கூடாது, தொடர்ந்து திட்டமிட்டு வேகமாக முன்நகர வேண்டும் என்பதற்கும் அவர்கள் சாட்சிகள். 2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த ராஜபக்ஷக்கள் 2018இல் தென் இலங்கையை கிட்டத்தட்ட முழுவதுமாக கைப்பற்றிவிட்டார்கள். 2019இல் மூன்றில் இரண்டுக்கு அண்மித்த வாக்குகளைப் பெற்று பெரு வெற்றியை அடைந்தார்கள். இப்போதும் அப்படித்தான், அறகலய மூலம் வீட்டுக்கு அனுப்பப்பட்டாலும், அதிலிருந்து விரைவாக மீண்டு அடுத்த கட்டங்களை தீர்மானிக்கும் நிலைக்கு உயருகிறார்கள். அதனை, தொடர் தோல்வியில் இருக்கும் அரசியல் தரப்புக்கள் பார்த்து உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில், தோல்வி கண்டவுடன் ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பதால் எழுச்சி ஏற்பட்டுவிடாது. ராஜபக்ஷக்களைச் சுற்றிய அரசியல் என்பது இன்னும் சில தலைமுறைகள் நீளும்.

# தமிழர்களின் கையில் மீண்டும் ஆயுதத்தை திணிக்க முற்படும் செயலா வெடுக்குநாறிமலைத் தாக்குதல்?

## அருட்தந்தை சத்திவேல் காட்டமாகக் கேள்வி

வன்முறை அரசியலை விரும்புகின்றனர் என்பதை வெடுக்குநாறி மலை சிவ வழிபாடு மீதான தாக்குதல் சம்பவம் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது. தமிழர்களின் கையில் மீண்டும் ஆயுதம் திணிக்க முற்படும் செயலா என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவிலில் நீதிமன்ற அனுமதியுடன் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிவ பக்தர்களையும், அவர்களின் வழிபாட்டையும் அவமானப்படுத்தும் வண்ணம் பொலிஸார் வழிபாட்டுப் பொருள்களை சப்பாத்து காலால் உதைத்து தள்ளியதோடு, பெண்களை இழிவுபடுத்தியும் பலரைக் கைது செய்துமுள்ளனர்.

இதில் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஒட்டுமொத்த சிவ பக்தர்களுக்கும் வருத்தத்தை தெரிவிக்கின்றோம்.

இது, நாட்டின் அடிப்படை மனித உரிமையும் மற்றும் வழிபாட்டு உரிமையையும் மீறும் செயல் மட்டுமல்ல. தமிழர்கள் மீதும் இந்துக்கள் மீதும் தொடர்ந்து கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இனவாத, மதவாத வன்முறையின் தோற்றமுமாகும்.

இதில் பொலிஸார் அராஜகத்தோடு ஈடுபட்டுள்ளனர். பேரினவாத அதிகார அரசியல் பக்கபலமும் அதற்கு உள்ளது என்பதை உணரக்கூடியதாக உள்ளது. இக்கொடிய மதவாத, இனவாத வன்முறை தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். இதற்கு, சமயம் கடந்து அனைத்து சமய தலைவர்களும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் தமது எதிர்ப்பை கூட்டாக வெளிக்காட்ட வேண்டும்.

களனியை மையமாகக் கொண்டு இயங்கும் பௌத்த தகவல் நிலையம் எனும் அமைப்பு வெடுக்குநாறி மலையில் இனவாதம், மதவாதம் என்பவற்றைத் தோற்றுவிக்கும் வழிபாடு நடைபெறவுள்ளதாக பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளது. இக்கடிதம் எதனை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது? சிவராத்திரி வழிபாடு எவ்வாறு இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் எனவும் கேட்கின்றோம்.

இனவாதம், மதவாதம் அடிப்படை கருத்தியலில் இயங்கும் பயங்கரவாத அரசின் கூலிகளாக இயங்கும் பொலிஸாரே இனவாத, மதவாத அதிகார வெறியினை சிவ பக்தர்களிடம் காட்டியுள்ளமை வெட்கக்கேடாகும். அங்கு கூடியிருந்த பக்தர்கள் 'பொலிஸ் அராஜகம் ஒழிக!' என்றோ அல்லது வேறு எந்த வகையிலோ தமது எதிர்ப்பை காட்டவில்லை. சமய பக்தி கோஷங்களையே அவர்கள் எழுப்பினர். இதுவா மதவாத மற்றும் இனவாத வழிபாடு?




ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் போதே தமிழர்களின் வழிபாட்டு உரிமை மீறப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பாக கடந்த காலங்களில் மனித உரிமை பேரவை பல அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கியபோது அவற்றை பின்பற்றாமல் சர்வதேசத்தை ஏமாற்றும் ஆட்சியாளர் மனித உரிமை பேரவை கூட்டத்தொடர் நடக்கும் சந்தர்ப்பங்களில் அதனை அவமதிப்பது போல் நடப்பது இது முதல் தடவை அல்ல.

அமைச்சர் ஒருவர் அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கியை வைத்து விரட்டி மிரட்டியதும் இவ்வாறான காலப்பகுதியிலாகும். அதே போன்று நேற்று இந்துக்களின் சிவ வழிபாட்டை கொச்சைப்படுத்தி அராஜகம் புரிந்துள்ளனர்.

இது இந்நாட்டில் தமிழர்களுக்கு எதிரான இனவாத வன்முறையை தொடர்கிறது என்பதை சுட்டி நிற்கிறது.

உயிர்ப்பு தினத்தில் குண்டுகளை வெடிக்கச் செய்து உயிர்களைக் கொண்டு அரசியல் செய்தவர்கள் தொடர்ந்து வன்முறை அரசியலை விரும்புகின்றனர் என்பதை வெடுக்குநாறிமலை சிவ வழிபாடு மீதான சம்பவம் உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

தமிழர்களின் கையில் மீண்டும் ஆயுதம் திணிக்க முற்படும் செயலா எனவும் கேட்கின்றோம்.

தேர்தல் காலத்தில் தமிழர்களின் வாக்குகளை எதிர்பார்த்து அரசியல் செய்யும் தென்பகுதிக் கட்சிகள் வெடுக்குநாறி மலையில் நடந்த அரச பயங்கரவாதத்துக்கு எதிராகவும் அதனை தூண்டிவிட்டு குளிர் காய்பவர்களுக்கு எதிராகவும் கருத்துத் தெரிவிக்க வேண்டும்.

சர்வதேச பெண்கள் தினத்தில் அவ்வழிபாட்டில் கலந்துகொண்ட பெண்களை அவமானப்படுத்தியதற்கு பெண்கள் தினத்தை கொண்டாடிய அனைத்து சக்திகளும் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த வேண்டும்.

அத்தோடு மனித உரிமை அமைப்புகள் இதற்கு எதிராக தம் எதிர்ப்பை தெரிவிப்பதோடு ஜெனிவா மனித உரிமை பேரவையில் தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு தனது ஆதரவையும் நல்க வேண்டும்.

தமிழர் தாயகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் தமிழர் தாயகத்தை சூழ்ந்துள்ள இருளினை கருத்தில் கொண்டு விழிப்பு நிலையில் இருக்க வேண்டும். அத்தகைய விழிப்பினை கடந்த வாரம் சாந்தனின் உடல் எடுத்துச் சென்ற போது காட்டியது போன்று ஒன்றுபட்ட சக்தியாக வெளிப்படுத்துவதற்கான காலம் உருவாகி வருகின்றது என்பதை உணர்ந்து தேசிய சிந்தனையோடு கூட்டாக செயற்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும். - என்றுள்ளது.



# எட்டு லட்சத்து 60 ஆயிரம் மாணவர்கள் போசணைக் குறைபாட்டுடன் உள்ளனர்

## சர்வதேச ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

இலங்கையில் 5 முதல் 19 வயது வரையிலான 410,000 பாடசாலையில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகள் போசணைக் குறைபாடு காரணமாக எடை குறைவாக உள்ளனர் என வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அதே சமயம் நாட்டில் 17.8 சதவீத ஆண் பிள்ளைகள் தங்கள் வயதுக்குக் குறைவான எடையுடன் உள்ளனர். அதாவது 450,000 ஆண் பிள்ளைகள் இந்த நிலையில் உள்ளனர்.

இது குறித்து வைத்தியர்களின் மருத்துவ மற்றும் குடியுரிமைகள் நிபுணத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளவை வருமாறு:-

பிரித்தானிய 'லான்செட் மெடிக்கல் ஜேர்னல்' இதழின் ஆய்வின்படி உலகில் போசணை குறைபாடு காரணமாக உடல் எடை குறைந்தவர்கள் அதிகம் இருக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது.

உலகளவில் உடல் எடை குறைவினால் பாதிக்கப்பட்டவர்களில் பெண்களின் வீதம் இந்தியாவுக்கு அடுத்தபடியாக இலங்கையில் உள்ளது.

199 நாடுகளில் 22 கோடி பேரிடம் சுமார் 1,900 ஆராய்ச்சியாளர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் உடற் திணிவுச் சுட்டி (உயரத்திற்கான எடை) முக்கிய அளவுகோலாக எடுக்கப்பட்டுள்ளது.

ஒருவரது உடலினது உயரத்திற்கு பொருத்தமான நிறை எவ்வளவு என்பதை கணித்தல் உடற் திணிவுச் சுட்டி ஆகும்.

1990 - 2022 வரை சேகரிக்கப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், போசணைக் குறைப்பாட்டால் பாடசலை பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவது மட்டு மன்றி, மனவளர்ச்சி குன்றும் ஆபத்திலும் உள்ளனர். எனவே இதற்கு அரசாங்கம் நடவ டிக்கை எடுக்காவிட்டால் நாட்டில் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் தலைமுறை உருவாகும்.

போசணை குறைபாடு காரணமாக பிள்ளைகளிடையே என்சைம்கள் மற்றும் ஹோர்மோன்களின் உற்பத்தி பலவீனமடைந்து நாளாந்த உடல் செயல்பாடுகளில் தொய்வு நிலை ஏற்பட அது வழிவகுக்கிறது. அத்தோடு சிறுவர்கள் நோயெதிர்ப்புச் சக்தி குறைபாடு காரணமாக பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுவார்கள்.

போசணைக் குறைப்பாடு நெருக்கடி மனவளர்ச்சி குன்றுவதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இது நாட்டில் தேசிய அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய கல்வி கற்ற மற்றும் புத்திசாலி இளைஞர்களின் எண்ணிக்கை குறைவதற்கு இது வழிவகுக்கும்.

நாட்டில் 17.8 சதவீத ஆண் பிள்ளைகள் தங்கள் வயதுக்குக் குறைவான எடையுடன் உள்ளனர். அதாவது 450,000 ஆண் பிள்ளைகள் உள்ளனர்.

அதன்படி, நாட்டில் மொத்தமான 860,000 பாடசாலை மாணவர்கள் எடை குறைவாக இருக்கின்றனர் எனப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.



# ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்கான இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வர ஏற்பாடு!

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்கான கப்பலில் இருந்து மீட்கப்பட்ட இலங்கையர்கள் இருவரையும் விரைவில் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படுமென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எத்தியோப்பியாவிற்கான இலங்கை தூதுவரால் இருவரையும் நாட்டிற்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என வெளிவிவகார அமைச்சுக் கூறியுள்ளது.

மேற்படி இருவரும் தற்போது ஜிபுட்டியில் தங்கியுள்ளனர்.

சீனாவிலிருந்து ஜெட்டா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த True Confidence வணிகக் கப்பல் மீது யேமன் நேரப்படி கடந்த வியாழக்கிழமை காலை 11.30 அளவில் ட்ரோன் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த தாக்குதலால் கப்பலின் கட்டுப்பாட்டு அறையை அண்மித்த பகுதியிலும் தீ விபத்து ஏற்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் யேமனிலுள்ள ஏடன் துறைமுகத்திலிருந்து 50 கடல் மைல் தொலைவில் கப்பல் பயணித்துக்கொண்டிருந்தது.

23 பேரைக் கொண்ட பணியாளர்கள் கப்பலில் இருந்துள்ளனர். அவர்களுள் நால்வர் கடுமையான தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி கப்பலில் மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் இருந்துள்ளனர். அவர்களில் இருவர் இலங்கையர்களாவர். நேபாள பிரஜை ஒருவரும் அதில் அடங்குகிறார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வியட்நாம் பிரஜைகள் நால்வர், பிலிப்பைன்ஸ் பிரஜைகள் 15 பேர், இந்திய பிரஜை ஒருவரும் அந்த கப்பலில் இருந்துள்ளனர்.

கப்பலில் இருந்த பணியாளர்கள், இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான கொல்கத்தா போர்க் கப்பல் மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அரசாங்கம் நெல் கொள்வனவை மார்ச் 11 முதல் ஆரம்பிக்கவுள்ளது

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அரசாங்கம் நெல் கொள்வனவை ஆரம்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அம்பாந்தோட்டையில் இருந்து நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அரசாங்கத்திடம் இருந்து இதுவரை உதவிகள் கிடைக்கப்பெறவில்லை எனவும் எதிர்வரும் வாரத்திலேனும் தமக்கான உதவிகள் கிடைக்கப்பெறுமென நம்புகிறோம் எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அந்த உதவிகள் கிடைக்கப்பெறாத பட்சத்திலும், அமைச்சின் நிதியினூடாக நெல் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.



# சீஷெல்ஸ் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்!

ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்கப்பட்டு சீஷெல்ஸ் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் 9 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

தங்களை நாட்டுக்கு உடனடியாக அழைத்துச் செல்லுமாறு வலியுறுத்தி, இந்த மாதம் முதலாம் திகதி உண்ணாவிரத போராட்டத்தை மீனவர்கள் ஆரம்பித்திருந்தனர்.

லோரன்சோ புதா 4 என்ற மீன்பிடி படகில் கடற்றொழிலுக்கு சென்ற 6 மீனவர்களே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி படகு கடந்த ஜனவரி 12 ஆம் திகதி டிக்கோவிட்ட துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது.

சிலாபம் – மாரவில பிரதேசத்தில் வசிக்கும் 6 மீனவர்களே படகில் பயணித்திருந்தனர்.

இந்த நிலையில், மீனவர்கள் ஆயுதக் குழுவினரால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த நிலையில், சீஷெல்ஸ் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மீட்கப்பட்டனர்.

மீனவர்கள் தற்போது சீஷெல்ஸ் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# இன்றைய ராசி பலன்கள் - 10.03.2024




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும். அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.




உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும். இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும். இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். தியானம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




இன்று சாதகமான நாள். வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள். இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சாதகமான நாளாக அமையாது. மனதை ஓய்வாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகுமுறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம். இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும். இன்று சிறிது பதற்றமாக காணப்படுவீர்கள். பாது காப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம். நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். நீங்கள் பதட்டமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.




எதிர் காலம் பற்றிய எண்ணங்களும் கனவுகளும் உங்கள் மனதில் நிறைந்து காணப்படும். இது அனைவரிடத்திலும் காணப்படும் பொதுவான விருப்பம். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு சிறந்த நாள்.

பணியிடத்தில் உன்னதமான வளர்ச்சி காணப்படுகின்றது. உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

பரிசுப் பொருள்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் துணை திருப்தி காண்பார். இன்று பணவரவு காணப்படும். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உங்களிடம் தேவையான பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் இன்று வலிமை நிறைந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.03.2024




உங்கள் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுக்க வேண்டியது அவசியம். இன்று அதை பொறுப்புகள் காணப்படும். நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி தாமதமாகும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் அடையலாம்.

இருக்கும் வேலையை விட்டு வேறு வேலைக்கு போகும் எண்ணம் உண்டாகும். உங்களுக்கு திருப்தி அளிக்கும் ஒரு மாற்றத்தை இன்று நீங்கள் விரும்புவீர்கள்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுக்காமல் சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க இந்த அனோகுமுறை தேவை.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். அதனைச் சுமையாக உணர்வீர்கள். பணத்தை திட்டமிட்டு தேவைகளுக்கேற்ப ஒதுக்கி செலவுகளை தவிர்த்திடுங்கள். பல்வலி மற்றும் கண்ணில் பாதிப்புகள் ஏற்படலாம்.




உங்களின் ஆற்றலை நீங்கள் உணரும் நாள். இலக்குகளை நிர்ணயித்து அதை அடைவதற்கு முயன்றால் வெற்றி காணலாம். உங்கள் பணிகளை முன்னுரிமைப்படுத்தி அதன்படி ஆற்றுங்கள்.

நீங்கள் இன்று கடினமான உழைத்து உங்கள் மேலதிகாரிகளை உங்கள் பக்கம் ஈர்ப்பீர்கள். உங்கள் பணிகளை எளிதாக செய்வதற்கான திறமை இன்று உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிப்பீர்கள்.

உங்களிடம் போதிய அளவைவிட பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் அதிக ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு அல்லது பதற்றத்தை தவிர்த்துவிடுங்கள். உங்கள் இலக்குகளை அடைவது இன்று கடினமாக இருக்கும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது பதட்டத்தை உண்டாக்கும். முக்கியமான பணிகள் கூட நிலுவையில் காணப்படும்.

இன்று உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு ஏற்பட அவரை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படுகின்றது. பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

ஆரோக்கியம் சிறந்து விளங்க அதிக அளவில் நீரைப் பருகவும். தலைவலி மற்றும் சில அசௌகரியங்கள் காணப்படும்.




இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். தியானம் அல்லது யோகா போன்றவைகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகளைக் கையாள்வது உங்களுக்கு கடினமாக காணப்படும். அதிகரித்து காணப்படும் பணிச்சுமை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். எனவே கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் கலகலப்பாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்று மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

இன்று பணத்தை முறையாக பயன்படுத்த முடியாது. பணம் விரைவில் கரையும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.பதற்றம் காரணமாக இன்று நரம்பு தளர்ச்சிக்கு ஆளாகலாம்.






# பண்டிகை காலத்தில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை



"எதிர்வரும் பண்டிகை காலத்தினை முன்னிட்டு தேவையான முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன."

– இவ்வாறு கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் ஆசிறி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

இதன்படி, இந்த காலப்பகுதியில் 40 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது முட்டை உற்பத்தியுடன் தொடர்புடைய மூலப்பொருள்களின் விலை குறைந்துள்ளமையினால் நுகர்வோருக்கு முட்டைகளை குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியும் எனவும் கால்நடைகள் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

# ஐ.எம்.எவ். பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கபோவதில்லை

## திஸ்ஸ அத்தநாயக்க தகவல்




ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் பங்கேற்கபோவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டக் குழுவுடன் நாளை திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கான சந்திப்பொன்றுக்கு ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் அவர்களுடன் கட்சி ரீதியாக பிரத்தியேகமாக கலந்துரையாடவுள்ளார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடலுக்கு அழைப்பு கிடைத்துள்ளது. எனினும், இந்த சந்தர்ப்பத்தில் தாம் அந்த சந்திப்புக்கு செல்லவேண்டுமா என்பதில் சிக்கல் உள்ளது.


சர்வதேச நாணய நிதியத்தின் தவணை நிதியை பெற வேண்டும் எனினும், பொதுமக்களைப் பாதிக்கும் விடயங்கள் செயல்படுத்தப்படக்கூடாது.

மக்களை ஒடுக்கும் இந்த வேலைத்திட்டத்தில் எங்களையும் இணைப்பதற்காக ஜனாதிபதி எமக்கு இந்த கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளனர்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையில் கட்சியாக பங்கேற்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்." – என்றார்.

# அதிக வெப்பத்தின் காரணமாக கண் நோய் ஏற்படும் சாத்தியம்!

## அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல்




அதிக வெப்பம் காரணமாக கண் நோய்கள் ஏற்படும் சாத்தியங்கள் காணப்படுகின்றன என கண் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரிய ஒளி நேரடியாக கண்ணில் பட்டால், அதன் செல்கள் சேதமடைவதுடன், விழிப்புலன் இழக்கப்படலாமென கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர், கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் மதுவந்தி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெப்பம் காரணமாக கண் வறட்சி ஏற்படும் என்பதினால், தேவையான நீராகாரங்களை உட்கொள்வது அவசியமெனவும் அவர் தெரிவித்துள்ளார். வயதானவர்கள் மற்றும் சிறுவர்களுக்கு அதிக பாதிப்புகள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கணினி பாவனை அதிகம் உள்ள நபர்கள் மற்றும் ஏற்கனவே கண் நோய் உள்ளவர்களுக்கு பாதிப்புகள் அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். பல பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பம் அதிகரித்து காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு, தெற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மொனராகலை, இரத்தினபுரி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வாறு அதிக வெப்பநிலை பதிவாகுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.எம்.எவ். பிரதிநிதிகளுடனான நாளைய பேச்சுகளில் கலந்துகொள்வது தொடர்பான கட்சிகளின் தீர்மானம்!

## + சஜித்தின் கட்சி, ஜே.வி.பி. பங்குபற்றாது
## + தமிழரசுக் கட்சி இரட்டை நிலைப்பாட்டில்




சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுடன் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாமல் இருக்க சில கட்சிகள் தீர்மானித்துள்ளன.

இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளாமல் இருக்க ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் தீர்மானித்துள்ளன.

எனினும், இதில் கலந்துகொள்வது தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சி இரண்டு நிலைப்பாடுகளில் உள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் தொடர்பில் அதன் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்க்கட்சிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தார்.

அதன்படி, நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன் நாளை நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளாமலிருப்பது உசிதமானதென்பதே தமது கட்சியில் பெரும்பாலானோரின் நிலைப்பாடு என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதிய பிரதிநிகளுடன் நடைபெறவுள்ள பேச்சுவாரத்தையில் கலந்துகொள்ளுமாறு தமக்கு அழைப்புக் கிடைத்ததாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் விவகாரம் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனே தீர்மானிக்க வேண்டும் எனத் தான் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவிக்கு அறிவித்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த பேச்சுவார்த்தையில் தான் கலந்துகொள்ளப்போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுமாறு தனக்கு அழைப்புக் கிடைத்துள்ளது எனவும் தான் அதில் கலந்து கொள்ளவுள்ளார் எனவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளுமாறு தமக்கு அழைப்புக் கிடைக்கவில்லையென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதில் ஆட்சேபனை இல்லை என்றாலும், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்பு எதிர்க்கட்சியினர் கூட்டாக சில தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பு கலந்தாலோசித்திருக்க வேண்டும் என

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தமது கட்சி கலந்துகொள்ளாது என தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னரைப் போன்றே கட்சிகள் மீண்டும் பொறுப்புகளில் இருந்தும் சவால்களில் இருந்தும் தப்பிச் செல்லும் நிலைமை தெரிவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நேற்று சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தை தவற விடாமல் செயற்படுவது அனைத்துக் கட்சித் தலைவர்களினதும் பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டுப் பணியாளர்கள் மூலமாக

# 476 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி வருமானமாம்



வெளிநாட்டுப் பணியாளர்கள் மூலம் நாட்டிற்கு கடந்த பெப்ரவரி மாதத்தில் 476 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி கிடைக்கப்பெற்றுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் 14 வீத அந்நியச் செலாவணி அதிகரித்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலத்திரனியல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கியமை, பல்நோக்கு கடன் திட்டத்தை அமுல்படுத்தியமை, ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்தியமை உள்ளிட்ட திட்டங்கள் காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட்:
# வென்றது சென். பற்றிக்ஸ் கல்லூரி




ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்காக கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையில் 31ஆவது வருட ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான (50 ஓவர்கள்) கிரிக்கெட் போட்டி நேற்று (09) சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் முதல் மூன்று விக்கெட்டுக்களை 13 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது.

எனினும், 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்து சிறப்பாக ஆடிய டேவிட் அபிலாஸ் (34), றொபின்சன் சியன்சண் (24) ஆகியோர் சிறப்பாக ஆடி இணைப்பாட்டமாக 57 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

அடுத்து ஏழாவது விக்கட்டுக்காக ஜோடி சேர்ந்த பற்குணம் மதுஷன் – குமணதாசன் சாருசன் இணை 57 ஓட்டங்களை இணைப்படாட்டமாகப் பெற்றுக் கொடுக்க, 50 ஓவர்கள் நிறைவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களான மு. புவிநயன் 3 விக்கெட்டுகளையும், மதுஷன் மற்றும் நர்த்தனன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் 191 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி, 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக நர்த்தணன் அதிகபட்சமாக 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக மு.சாருசன் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அபிலாஸ் மற்றும் பிரியங்கன் ஆகியோர் தலா இரண்டு விக்கட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மு.சாருசனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பற்குணம் மதுஷனும், சகலதுறை ஆட்டக்காரராக யாழ்ப்பாணக் கல்லூரியின் நர்த்தனனும், சிறந்த இணைப்பாட்ட வீரர்களாக டேமியன் மற்றும் நர்த்தனனும், சிறந்த களத்தடுப்பாளராக றொய்ஸ் ஜென்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணித் தலைவர் சு.சியன்சண் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த மதுஷன் ஆகியோர் விசேட பரிசில்களைப் பெற்றனர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் துணைத் தலைவர் மதுஷன் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் ஐ. இமக்ஷன் ஆகியோர் Spirit Of Cricket விருதைப் பெற்றனர்.






# பங்களாதேஷை சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தி இருபது-20 தொடரை வசப்படுத்தியது இலங்கை

பங்களாதேஷ் அணிக்கு எதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, 2:1 என்ற சுற்றுக் கணக்கில் இருபது-20 தொடரைத் தன்வசப்படுத்தியது.

பங்களாதேஷுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அந்த அணியுடன் இருபது-20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று வருகின்றது.

இதில், முதலில் 3 போட்டிகளைக் கொண்ட இருபது-20 தொடர் நடைபெற்றது. ஏற்கனவே நடைபெற்று முடிந்த இரு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றன.

இந்நிலையில், மூன்றாவது மற்றும் கடைசி இருபது-20 போட்டி நேற்று (9) நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, குசல் மெண்டிஸின் (86) சிறப்பான ஆட்டம் கைகொடுக்க, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 174 ஓட்டங்களைச் சேர்த்தது.

பங்களாதேஷ் அணி சார்பாக பந்து வீச்சில், தஸ்கின் அஹமட், ரிஷாட் ஹுசைன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் 175 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 19.4 ஓவர்களில் 146 ஓட்டங்களுள் ஆட்டமிழந்தது.

இதனால், இலங்கை அணி, 28 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவு செய்தது.

பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்டத்தில், ஆகக்கூடுதலாக ரிஷாட் ஹுசைன் அரைச்சதம் (53) அடித்தார்.

இலங்கை சார்பாகப் பந்துவீச்சில் நுவான் துஷார 5 விக்கெட்டுகளைச் சாய்த்து அசத்தினார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, 2:1 என்ற அடிப்படையில் இருபது-20 தொடரைத் தன் வசப்படுத்தியது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இலங்கையின் நுவான் துஷார தெரிவானார். தொடர் நாயகனாக குசல் மெண்டிஸ் தெரிவானார்.

இரு அணிகளும் அடுத்து பங்கேற்கவுள்ள ஒருநாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

